**Please print the letter below and photocopy onto school letterhead before distribution**

சமீபத்திய சமுதாய நிகழ்வுகள் சம்பந்தமாகப் பெற்றோர்களுக்கு எழுதும் கடிதம்
Letter to parents regarding recent community events

அன்பான பெற்றோர்/பாதுகாவலரே

சமீபத்தில் நடைபெற்ற சமுதாய நிகழ்வுகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, உங்களது பாடசாலை இன்று பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இப்பாடசாலை, அனைவருக்கும் தொடர்ந்து பாதுகாப்பானதோர் சூழலாகவே இருக்கும் என்பதாக மாணவர்களுக்கு மறுவுறுதி செய்யப்பட்டது. மாணவர்களுக்கு மாணவர் நலன் மற்றும் இனப்பாகுபாடு எதிர்ப்புக் கொள்கைகளின் உட்பிரிவுகள் குறித்து நினைவுபடுத்தப்பட்டது, அவை தனிப்பட்ட விதத்தில் உபத்திரவம் எதையும் மாணவர்கள் அனுபவிக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு ஆதரவு கொடுக்கப்படும் என்பதையே உறுதி செய்கின்றன.

மாணவர்களுக்கு, அவர்களது உணர்வுகள் குறித்துப் பேசுவதற்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டது, மேலும் அவர்கள் கவலையடைந்தாலோ அல்லது மனமுடைந்து போனாலோ, அவர்கள் பாடசாலை அறிவுரையாளர் அல்லது மற்ற பாடசாலை ஊழியர்களை அணுகலாம். தேவைப்படுகிற மாணவர் எவருக்கும் தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படும்.

இத்தகைய நிகழ்வுகள் குறித்து நீங்கள் உங்களது பிள்ளைகளோடு பேச முடிகிறதென்றால் அது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருந்து, பாடசாலையிலும், பரந்த சமுதாயத்திலுமாகிய இரண்டிலுமே அவர்கள் தொடர்ந்து சகிப்புத் தன்மையுடையவர்களாகவும், அனைவர்பாலும் கரிசனையுள்ளவர்களாகவும் இருக்க அவர்களை ஊக்கப்படுத்தும்.

கடினமான சூழ்நிலைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிற பிள்ளைகளைப் பொருத்த வரையில் அவர்கள் வீட்டில் சாதாரணமாகச் செய்கிற வழக்கமான காரியங்களையும், அவர்களுக்குப் பிடித்த விடயங்களையும் கடைபிடிப்பது அவர்களுக்கு உபயோகமானதாக இருக்கிறது.

உங்கள் பிள்ளைக்கான குறிப்பான கவலைகள் ஏதும் உங்களுக்கு இருந்தால், தயவுசெய்து பாடசாலையைத் தொடர்பு கொள்ளுங்கள், கூடிய விரைவில் உதவி கிடைக்கச் செய்யப்படும்.

பாடசாலையைத் தொடர்பு கொள்வதற்கு உங்களுக்குத் துணைபுரிய மொழிபெயர்ப்பாளர் ஒருவர் தேவை என்றால், தயவுசெய்து 131 450 என்ற எண்ணில் தொலைபேசி மொழிபெயர்ப்புச் சேவையை அழைத்து, உங்கள் மொழியில் மொழிபெயர்ப்பவர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். அத்தொலைபேசி இணைப்பாளர், உங்கள் உரையாடலில் உதவுவதற்காக, தொலைபேசி இணைப்பிலேயே ஓர் மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடு செய்து தருவார். இச்சேவைக்கு உங்களுக்குக் கட்டணமேதும் விதிக்கப்படாது.

தங்கள் உண்மையுள்ள

முதல்வர் (Principal)